## வரத்து அதிகரிப்பு: பூண்டு விலை வீழ்ச்சி

First Published : 07 Mar 2011 01:16:14 PM IST

ஈரோடு, மார்ச் 6: வரத்து அதிகரிப்பு காரணமாக பூண்டு விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

ஈரோடு கொங்காலம்மன் கோயில் பகுதியில் ஐந்துக்கும் மேற்பட்ட பூண்டு மொத்த வியாபாரம் செய்யும் கிடங்குகள் உள்ளன.

இங்கிருந்து மதுரை, திருச்சி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு பூண்டு அனுப்பப்படுகிறது.

ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், குஜராத் மாநிலங்களில் இருந்து நாட்டுப் பூண்டு ஈரோட்டுக்கு வரவழைக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக பூண்டு வரத்து குறைந்ததால், பூண்டு விலை எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு கிலோ ரூ.220 வரை விற்பனையானது.

இந்த நிலையில், கடந்த சில வாரங்களாக ஒரு கிலோ நாட்டுப் பூண்டு ரூ.50 முதல் ரூ.60 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

உதகை, கொடைக்கானல், ஹிமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பூண்டு வரத்து அதிகரித்ததால், விலை திடீரென வீழ்ச்சி அடைந்தது.

இரண்டாம் தர பூண்டு ரூ.20 முதல் ரூ.30-க்கும், நாட்டு பூண்டு ரூ.40 முதல் ரூ.50-க்கும், மலை பூண்டு ரூ.70 முதல் ரூ.80-க்கும் விற்கப்படுகிறது.

## மஞ்சளை இருப்பு வைக்கும் விவசாயிகள்

First Published : 07 Mar 2011 01:10:52 PM IST

ஈரோடு, மார்ச் 6: மஞ்சளின் விலை தொடர்ந்து குறைந்து வருவதால், விவசாயிகள் இருப்பு வைக்கத் துவங்கியுள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் மைசூர் சம்பா, 8, 10-ம் எண் மஞ்சள் ரகங்கள் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளன.

காலிங்கராயன்பாளையம், மூலப்பாளையம் பகுதியில் 10-ம் எண் மஞ்சள் பயிர் அறுவடை நடக்கிறது. அறுவடை செய்யப்பட்டுள்ள மஞ்சளை வேகவைக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு ஏக்கரில் மஞ்சள் பயிரிடுவதற்கு, நடவு கூலி, மூன்று முறை மருந்து தெளிப்பது என ரூ.25 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரை செலவாகிறது. அறுவடை கூலியாக ஏக்கருக்கு ரூ.11 ஆயிரம் செலவாகிறது. கடந்த ஆண்டு அறுவடை கூலி ரூ.7,000 முதல் ரூ.8,000 ஆயிரம் வரை செலவானது குறிப்பிடத்தக்கது.

மேலும், கடந்த ஆண்டில் ஒரு கொப்பரை மஞ்சளை வேக வைக்க ரூ.35 கூலி வழங்கப்பட்டது. நடப்பாண்டில் அதுவும் இரு மடங்காக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு இறுதியில் மஞ்சள் ஒரு குவிண்டால் ரூ.17 ஆயிரத்து 500 வரை விற்பனையானது. தற்போது, படிப்படியாக விலைகுறைந்து, புது மஞ்சள் ரூ.10 ஆயிரத்துக்கு விற்கப்படுகிறது.

விலை குறைவு காரணமாக அறுவடை செய்யப்படும் மஞ்சளை, விவசாயிகள் வீடுகளில் இருப்பு வைக்கத் துவங்கியுள்ளனர்.

மஞ்சளை இருப்பு வைப்பதன் மூலம், நடப்பாண்டு இறுதியில் விலை உயரும் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

வரத்து அதிகரிப்பு: பூண்டு விலை வீழ்ச்சி

ஈரோடு, மார்ச் 6: வரத்து அதிகரிப்பு காரணமாக பூண்டு விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

ஈரோடு கொங்காலம்மன் கோயில் பகுதியில் ஐந்துக்கும் மேற்பட்ட பூண்டு மொத்த வியாபாரம் செய்யும் கிடங்குகள் உள்ளன.

இங்கிருந்து மதுரை, திருச்சி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு பூண்டு அனுப்பப்படுகிறது.

ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், குஜராத் மாநிலங்களில் இருந்து நாட்டுப் பூண்டு ஈரோட்டுக்கு வரவழைக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக பூண்டு வரத்து குறைந்ததால், பூண்டு விலை எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு கிலோ ரூ.220 வரை விற்பனையானது.

இந்த நிலையில், கடந்த சில வாரங்களாக ஒரு கிலோ நாட்டுப் பூண்டு ரூ.50 முதல் ரூ.60 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

உதகை, கொடைக்கானல், ஹிமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பூண்டு வரத்து அதிகரித்ததால், விலை திடீரென வீழ்ச்சி அடைந்தது.

இரண்டம் தர பூண்டு ரூ.20 முதல் ரூ.30-க்கும், நாட்டு பூண்டு ரூ.40 முதல் ரூ.50-க்கும், மலை பூண்டு ரூ.70 முதல் ரூ.80-க்கும் விற்கப்படுகிறது.

இது தொடர்பாக பூண்டு வியாபாரிகள் கூறுகையில், கடந்த ஆண்டு இறுதியில் பூண்டு விலை கடுமையாக உயர்ந்தது.

கடந்த இரு வாரங்களாக வரத்து அதிகரித்துள்ளது. தினமும் மூன்று லாரிகளில் பூண்டு வந்து கொண்டிருந்தது, தற்போது 10 முதல் 15 லாரிகள் வரை வருகிறது. பூண்டு வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், விலை மேலும் வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது என்றனர்.

**"நோயற்ற வாழ்வுக்கு உயிர் உரங்களின் பயன்பாடு அவசியம்'**

First Published : 07 Mar 2011 01:09:29 PM IST

பவானி, மார்ச் 6: மனித சமுதாயத்தின் நோயற்ற வாழ்வுக்கு உயிர் உரங்களின் பயன்பாடு மிகவும் அவசியம் என மத்திய அரசின் வனத் துறை ஆராய்ச்சி நிறுவன மூத்த விஞ்ஞானி ஏ.மோகன் தெரிவித்தார்.

குமாரபாளையம் அருகேயுள்ள வீராச்சிபாளையம் ரவீந்திரநாத் மகளிர் பொறியியல் கல்லூரியில் தேசிய அறிவியல் தின விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கல்லூரித் தாளாளர் மு.கருணாநிதி தலைமை வகித்தார். முதல்வர் ஏ.கிருஷ்ணகுமார் வரவேற்றார்.

இதில், விஞ்ஞானி ஏ.மோகன் பேசுகையில், அறிவியல் அறிஞர்கள் அடுத்த தலைமுறைக்கு உதவும் புதிய கண்டுபிடிப்புகளை உலகுக்கு அளித்து வருகின்றனர். மாணவர்கள் அடிப்படை அறிவியலைப் புரிந்து கொண்டு, எதிர்கால தலைமுறைக்கு உதவும் ஆராய்ச்சிகளில் ஈடுபட வேண்டும். நோயற்ற வாழ்வுக்கு உயிர் உரங்களின் பயன்பாடு மிகவும் அவசிமானது என்றார்.

தொடர்ந்து, புதிய கண்டுபிடிப்புக் கண்காட்சி நடைபெற்றது. இதில், மூளை அலை மாற்றி செயல் திட்டம், தமிழ்மொழியில் வடிவமைக்கப்பட்ட இணைய தளம், நிலநடுக்கத்தை முன்னதாகவே அறிவிக்கும் கருவி ஆகியவற்றுக்கு முதல் 3 பரிசுகள் வழங்கப்பட்டன.

விரிவுரையாளர்கள் ரேவதி, தவமலர், புவனேஸ்வரி, முத்துக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முதலாமாண்டு தொழில்நுட்பப் பேரவை துவக்கப்பட்டு,

அறிவியல் தின விழா மலர் வெளியிடப்பட்டது.

**தேனீ, காளான் வளர்ப்பு: இலவசப் பயிற்சி**

First Published : 07 Mar 2011 10:35:58 AM IST

சிவகங்கை, மார்ச் 6 தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு, லாபம் தரும் மரம் வளர்த்தல், இயற்கை உரங்கள் தயாரித்தல் மற்றும் துல்லியப் பண்ணையம் ஆகியவை குறித்த 7 நாள் இலவச பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது.

ரூட்செட் பயிற்சி நிலையம் மூலம் மார்ச் 2-வது வாரத்தில் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. 18-45 வயதுக்குள் உள்ள, 8-வது வரை படித்த ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதற்கு பயிற்சி கட்டணம் ஏதுமில்லை. உணவு, தங்கும் வசதி இலவசமாக வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புபவர்கள் வெள்ளைத்தாளில் பெயர், வயது, கல்வித்தகுதி, அனுபவம், முழு விலாசம் போன்ற விவரங்களுடன் ரூ.5 ஸ்டாம்ப் ஒட்டிய சுயவிலாசம் எழுதிய கவருடன் இணைத்து கிராம வளர்ச்சி திட்டம் (ஆர்.ஐ.பி. அலுவலகம்), 63, முதல் மாடி, வ.உ.சி. தெரு, பிரம்மா குமாரிகள் யோகா மையம் அருகில், சிவகங்கை (மரக்கடை பஸ் நிறுத்தம் அருகில்) என்ற முகவரிக்கு 12.3.2011-க்குள் விண்ணப்பிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு 04575-29370, 0452-2690609, 7708680109, 9003831002, 9843392246 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**மார்ச் 10-ல் நாட்டுக்கோழி வளர்ப்பு இலவசப் பயிற்சி**

First Published : 07 Mar 2011 10:46:05 AM IST

கரூர், மார்ச் 6: கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி, ஆராய்ச்சி மைய வளாகத்தில் வணிக ரீதியான நாட்டுக்கோழி வளர்ப்பு இலவசப் பயிற்சி வகுப்பு மார்ச் 10-ல் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் க. செந்தில்வேல் வெளியிட்ட செய்திகுறிப்பு:

இந்தப் பயிற்சியில் நாட்டுக்கோழி வளர்ப்பு, பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, நோய்கள், அவற்றைத் தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள், பண்ணைப் பொருளாதாரம் ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளிப்பதோடு, களப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் 04324 - 294335 என்ற எண்ணில் தொடர்புகொண்டு முன்பதிவு செய்யலாம்.

பயிற்சி நாளான வியாழக்கிழமை காலை 10 மணிக்குள் வர வேண்டும் என்றார் அவர்.

மார்ச் 19-ல் இளைஞர்களுக்கு சுயதொழில் பயிற்சி

கரூர், மார்ச் 6: பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தொழில் முனைவோர் சுயவேலை மேம்பாட்டு நிறுவனம் சார்பில், கரூர் மாவட்டத்தில் உள்ள மாணவரல்லாத இளைஞர்கள் ஆண், பெண்களுக்கு சுய தொழில் முனைவதற்கான ஒருநாள் பயிலரங்கு மார்ச் 19-ல் நடத்தப்பட உள்ளது.

இப்பயிற்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கரூர் மாவட்ட வழிகாட்டி வேலைவாய்ப்பு மேம்பாட்டு மையமான, கரூர் வாங்கல் சாலையில் உள்ள அருட்பெருஞ்ஜோதி கல்வி அறக்கட்டளை வள்ளலார் கோட்டத்தில், கலாம் தகவல் தொழில்நுட்ப அரங்கில் நடைபெறுகிறது. ஐ.ஈ.சி.டி இயக்குநர் முனைவர் கோ. பார்த்தசாரதி தலைமை வகிக்கிறார்.

இப்பயிற்சியில் தொழில் முனைவோரின் சிறப்பம்சங்கள், தொழில் முனைய பண உதவி செய்யும் நிறுவனங்கள், வழிகாட்டிகள், கரூர் மாவட்டத்தில் சுயதொழில் செய்து முன்னேறியோருடன் கலந்துரையாடல் என பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதில் பங்கேற்போருக்கு உணவு, பயிற்சியேடு, பல்கலை. சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்தப் பயிற்சியில் 100 பேர் மட்டுமே கலந்துகொள்ள முடியும்.

எனவே, இதில் பங்கேற்க விரும்புவோர் 9244552225 என்ற எண்ணில் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என மாவட்ட மைய ஒருங்கிணைப்பாளர் குமர நித்யானந்தஜோதி தெரிவித்துள்ளார்.

**ஸ்பிக் உர ஆலையில் தேசிய பாதுகாப்பு தினம்**

First Published : 07 Mar 2011 01:48:14 PM IST

தூத்துக்குடி, மார்ச் 6: தூத்துக்குடி ஸ்பிக் உரத் தொழிற்சாலையில் 40-வது தேசிய பாதுகாப்பு தினவிழா நடைபெற்றது.

ஆலை வளாகத்தில் நடைபெற்ற விழாவின் தொடக்கமாக ஸ்பிக் நிறுவன அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு தேசிய பாதுகாப்பு தின அட்டைகள் வழங்கப்பட்டன. ஸ்பிக் நிறுவன பாதுகாப்புத் துறையினரால் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை நிறுவனத்தின் துணைத் தலைவர் இர. முத்துமனோகரன் தொடங்கி வைத்தார். தொடர்ந்து நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் பாதுகாப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

கண்காட்சியில் ஆலை மற்றும் இல்லப் பாதுகாப்புகள் குறித்த உபகரணங்களும், குறிப்பாக தீயணைப்பு குறித்த உபகரணங்களும், அவசர கால பாதுகாப்பு குறித்த விளக்கப் படங்களும், ஸ்பிக்நகர் பள்ளி மாணவ, மாணவியரின் ஓவியங்கள், கணினி மூலமாக உருவாக்கப்பட்ட வினாடி - வினா பரிசுப் போட்டிகளும் இடம் பெற்றிருந்தன.

மேலும், பாதுகாப்பில் ஸ்பிக் ஆலை சிறந்து விளங்கி வருவதற்காக உலக மற்றும் இந்திய அளவில் பெறப்பட்ட பல விருதுகளும் கண்காட்சியில் இடம் பெற்றன. பள்ளி மாணவ, மாணவியர் இக்கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

நிகழ்ச்சியில் நிறுவனத்தின் பொதுமேலாளர் சி. சொக்கலிங்கம் உள்ளிட்ட உயர் அலுவலர்கள், ஊழியர்கள், தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

**காளான் வளர்ப்பு பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்**

First Published : 07 Mar 2011 09:53:05 AM IST

விருதுநகர், மார்ச் 6: விருதுநகர் மாவட்டம், பாலையம்பட்டியில் உள்ள கிரிஷி வேளாண் சூழல் பயிற்சி மையம் சார்பில் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி முகாம் 5 நாள்கள் நடை பெற்றன.

காளான் வளர்ப்புப் பயிற்சி பெற்றவர்களுக்கு சாத்தூர் இன்சாட் தொண்டு நிறுவனத்தின் உதவி இயக்குநர் சுலோசனா, திருக்குமரன் நகர் மக்கள் மன்றத் தலைவர் தங்கராஜ் ஆகி யோர் சான்றிதழ்களை வழங்கினர்.

இதற்கான ஏற்பாடுகளை கிரிஷி பவுண்டேஷன் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர் இரா.சரவணராஜ், திட்ட ஒருங்கிணைப்பாளர் சிங்காரவேல், இயக்குநர் வெ.ராஜகோபால கிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

கால்நடை வளர்க்கப் பயிற்சி: கிரிஷி வேளாண் சூழல் அறக்கட்டளை சார்பில் கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடைகளுக்கு மூலிகை மருத்துவம் பயிற்சி மார்ச் 23 முதல் 25-ம் தேதி வரை நடைபெற உள்ளது.

இதில் விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், இளைஞர்கள் கலந்து கொள்ளலாம். பயிற்சியில் கலந்து கொள்ள முன்பதிவு செய்ய வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 97871 58073, 89034 55041 ஆகிய செல்போன் எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இத்தகவலை கிரிஷி வேளாண் சூழல் அறக்கட்டளைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரி வித்துள்ளார்.

தினமலர்

**தர்மபுரியில் நெல் கொள்முதல் குடோன் அமைக்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : மார்ச் 08,2011,01:53 IST

தர்மபுரி: தர்மபுரியில் அரசு சார்பில், நெல் கொள்முதல் குடோன் அமைக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயத் தொழிலை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் ஆண்டுதோறும், 20 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி

செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால், நெல் சாகுபடி அதிகரித்துள்ளது.

உள்ளூர் வியாபாரிகள் குறைந்த விலை நிர்ணயித்து, விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்வதால், கூடுதல் விலையை எதிர்பார்த்து விவசாயிகள் வெளி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கு எடுத்து செல்கின்றனர். தர்மபுரியில் அதிக நெல் அரவை மில்கள் உள்ளது. டெல்டா மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல், தர்மபுரியில் உள்ள மில்களுக்கு அரவைக்கு அனுப்புவதை தவிர்த்து, தர்மபுரியில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்து விவசாயிகளுக்கு கட்டுப்படியான ஆதார விலை நிர்ணயிக்க வேண்டும். மாவட்டத்தில் உற்பத்தி செய்யும் நெல்லை, அரசு சார்பில் கொள்முதல் செய்வதால், விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும், என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**காய்கறி விலை படிப்படியாக சரிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 08,2011,01:09 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி உழவர் சந்தைக்கு வரும் காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளதால், படிப்படியாக விலை குறைந்து வருகிறது. தமிழகத்தில் செப்டம்பர், நவம்பர் மாதங்களில் பெய்த மழையால், காய்கறி உற்பத்தி கடுமையாக பாதித்தது. மக்கள் அன்றாடம் சமையலில் பயன்படுத்தும் பெரிய வெங்காயம் 100 ரூபாய்க்கும், தக்காளி மற்றும் கத்தரிக்காய் 50 ரூபாய்க்கும் விற்றது. கோபி உழவர் சந்தைக்கு ஒரு வாரமாக காய்கறிகள் வரத்து அதிகரித்துள்ளது. ஜனவரி மாதம் ஒரு கிலோ தக்காளி 25 ரூபாய்க்கு விற்றது. தற்போது ஆறு ரூபாயாக குறைந்துள்ளது.
கத்தரிக்காய் 40 ரூபாயிலிருந்து 24, வெண்டைக்காய் 26லிருந்து 10, புடலை மற்றும் பீர்க்கங்காய் 28லிருந்து 14, சுரைக்காய் எட்டு ரூபாயில் இருந்து ஐந்து, பூசணி 10லிருந்து ஏழு, அவரை 44லிருந்து 14, முள்ளங்கி 20லிருந்து 12, மிளகாய் 30லிருந்து 16, பெரிய வெங்காயம் 50லிருந்து 12, சின்ன வெங்காயம் 38லிருந்து 24, உருளை 22லிருந்து 18, கேரட் 40லிருந்து 36, பீட்ரூட் 22லிருந்து 18, நூல்கோல் 20லிருந்து 18, முட்டைகோஸ் 20லிருந்து 14, காலிஃப்பிளவர் 20லிருந்து 10 ரூபாயாக விலை குறைந்துள்ளது. பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் திருமணம் உள்ளிட்ட சுப விசேஷங்கள் அதிகளவில்

நடப்பது வழக்கம். அப்போது, காய்கறி விலை உச்சத்தில் இருக்கும். ஆனால், காய்கறி விலை படிப்படியாக குறைந்து வருகிறது.

**சொட்டு நீர் பாசனத்துக்கு முழு மானியம் வழங்க மனு**

பதிவு செய்த நாள் : மார்ச் 08,2011,01:07 IST

ஈரோடு: "சொட்டு நீர் பாசனத்துக்கு முழுமையான மானியம் அளிக்க வேண்டும்' என, கரும்பு உற்பத்தியாளர் சங்கத்தினர் கலெக்டருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். புகளூர் சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ராமசாமி, செயலாளர் தங்கவேல், பொருளாளர் அமிர்தா குமாரசாமி ஆகியோர் கோரியுள்ளதாவது: காலிங்கராயன் வாய்க்காலில் சாய, தோல் ஆலைக்கழிவுகள் கலப்பதால் நிலத்தடி நீர் மாசுபட்டுள்ளது. தோல், துணி பதப்படுத்தும் ஆலைகளை, நீர் நிலைகள் இல்லாத பகுதியில் ஒரே வளாகத்தில் அமைத்து, கழிவுகள் நேரடியாக கடலில் கலக்க நிரந்தர திட்டமிட வேண்டும்.

சொட்டு நீர் பாசனத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில், சொட்டு நீர்ப்பாசனத்துக்கு முழுமையான மானியம் வழங்க வேண்டும். தற்போது நெல், மஞ்சள், கரும்பு அறுவடை பணிக்கு ஆட்கள் பற்றாக்குறையால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. விவசாய தொழிலாளர்கள் வேறு பணிக்கு சென்று விடுவதால், மற்ற மாவட்டத்தில் இருந்து ஆட்களை அறுவடை பணிக்கு அழைத்து வர வேண்டிய நிலை காணப்படுகிறது. எனவே, இரண்டு மாதத்துக்கு தேசிய கிராமப்புற வேலை உறுதி அளிப்பு திட்டத்தை தற்காலிகமாக நிறுத்த வேண்டும். விவசாயிகளின் நெல் கொள்முதலுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். நெல் மூட்டைகளை காலதாமதமின்றி கொள்முதல் செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

**காய்கறி விலை கடும் வீழ்ச்சி விவசாயிகள் பெரும் கவலை**

பதிவு செய்த நாள் : மார்ச் 08,2011,00:47 IST

புதியம்புத்தூர் : புதியம்புத்தூர் காய்கனி கமிஷன் மண்டிகளில் காய்கனி விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. பொங்கலுக்கு முன்பு பெய்த கனமழையில் பொ ங்கலுக்கு காய்கறி விலை கைக்கெட்டா தூரத்தில் இருந்தது. தக்காளி விலை 40க்கும், வெண்டை 25, கத்தரி 20, பூசணி 12, மிளகாய் 40, உருளை 30, பல்லாரி 70, சின்ன வெங்காயம் 50, அவரை 40, பாகற்காய் 50, அதலைக்காய் 60, பீட்ரூட் 20, கேரட் 25, கோஸ் 20, சௌ சௌ 25, சேனை, கருணை 25, புடலை 30, சிறுகிழங்கு 30, வாழைக்காய் 4 என்ற நிலையிலிருந்தது. ஏற்கனவே உளுந்து, து.பருப்பு, சீரகம், பூடு, சமையல் எண்ணெய் விØ லயேற்றத்தால் நிலை குØ லந்திருந்த மக்களுக்கு காய்கறிகளின் விலை உயர்வு மிகுந்த கஷ்டத்தை ஏற்படுத்தியிருந்தது. வெங்காய விலை உயர்வு இந்தியா முழுவதும் ஆளும் மத்திய மாநில அரசு மீது பொதுமக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த வாரத்தில் காய்கறி விலை மள மளவென சரியத்துவங்கி தற்சமயம் விவசாயிக்கு பறி கூலி கூட கிடைக்காத நிØ லயில் ஏலம் போகிறது. கத்திரி 8லிருந்து 10 வரையிலும், வெண்டை 5லிருந்து 7 வரையிலும், பூசணி 4க்கும், மிளகாய் 7க்கும், உரு ளை 11-13 வரையிலும், பல்லாரி 11-13 வரையிலும், சின்னவெங்காயம் 15 லிருந்து 20 வரையிலும், அவரை, பீட்ரூட், பீன்ஸ் 5க்கும், கேரட் 8க்கும், பா கற்காய் 25, கோஸ் 10, சௌ சௌ 8, சேனை, கருணை 15, புடலை 5, சிறுகிழங்கு 13, வாழைக்காய் 1 1/2 எ ன்ற ரேட்டிற்கு ஏலம் போகிறது. தக்காளி விலை 8லிருந்து படிப்படியாக இறங்கி பிப்.25 லிருந்து 28ம் தேதி வரை கிலோ 2.60க்கு நல்ல ரக தக்காளி விற்பனையானது. சுமார் ரக தக்காளி கிலோ 1.50க்கு கூட ஏலம் போனது.

தக்காளியை வாங்க எந்த வியாபாரியும் முன்வராத நிலையில் தற்சமயம் 2 நாளாக 4.50க்கு ஏலம் போனது. தக்காளி விலை வீழ்ச்சி குறித்து தட்டப்பாறை விவசாயிடம் கேட்டதற்கு 80கிலோ தக்காளி பறிக்க கூலியாக 80 கொடுக்கிறோம். பறித்த தக்காளியை கமிஷன் கடை க்கு கொண்டுவர செலவு சேர்த்து கிலோ 1.50 ஆகிறது. தக்காளி 2.50க்கு விØ ல போகிறது. இந்த நிலை நீடித்தால் தக்காளியை பறி க்காமல் விட்டு விடுவதை தவிர வேறு வழியில்லையென்று அந்த விவசாயி தெரிவித்தார். இதுபோக உழவு, பாத்தி

அமைக்க, தண்ணீர் இறைக்க, பூச்சிமருந்து செலவு எல்லாம் யாரிடம் போய் கேட்பது என்று அந்த விவசாயி கவலையுடன் தெரிவித்தார்.

காய்கறி விலை போல் இலைக்கட்டு விலையும் தரை ரேட்டிற்கு இறங்கியுள்ளது. மு கூர்த்த நேரங்களில் 3000க்கு விலை போகிறது. பெரிய இலைக்கட்டு, சாதாரண நேரங்களில் கூட 500க்கு விலையாகிற இலைக்கட் டு தற்சமயம் 100க்கு ஏலம் போகிறது. சின்னகட்டு 35, 50 என்று அடிமட்ட ரேட்டிற்கு விலையாகிறது. இø லக்கட்டு விவசாயிடம் கே ட்டால் ஒரு கட்டு இலை அறுத்துகட்ட 80 கூலியாகிறது. கமிஷன் கடைக்கு கொண்டுவர 10 சேர்த்து 90 செலவாகிற இலைக்கட்டு 35 விலைபோனால் விவசாயி பாடு அதோகதிதான். விவசாயியை வாட்டி வதைக்கும் இந்த காய்கறி விலை குறைவு பொதுமக்களுக்கு சென்றடைகிறதா என்றால் அதுதான் இல் லை. புதியம்புத்தூர் சில்லறை விற்பனை கடைகளில் 2 1/2க்கு தக்காளி வாங்கினாலும் அவர்கள் விற்பது என்னவோ 10க்கு தான்.

இதுபோல் எல்லா காய்கறிகளையும் அதிக விலைக்குத்தான் விற்பனை செய்கின்றனர். சில்லறை விற்பனையாளர்கள் கிலோ 400க்கு இருந்த வெள்ளைபூடு கூட கிலோ 100க்கு இறங்கியுள்ளது. காய்கறி, இலை இது போன்றவற் றை விதைத்து, பராமரித்து, பறித்து, விற்பனைக்கு எடுத்துச் செல்லும் செலவுகள் தற்போதைய காலங்களில் அதிகமாக உள்ளது. ஆனால் காய்கறிகளின் வி லையோ வீழ்ச்சியடைந்து ள்ளது. இந்நிலையில் வயி ற்றுப் பிழைப்புக்காக உள் ள விவசாயிகள் வாடி வத ங்கி பெரும் கவலைக்கு உள்ளாகியுள்ளனர்.

**கால்நடை வளர்ப்பு விழிப்புணர்வு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 08,2011,00:48 IST

புதூர் : புதூர் அருகேயுள்ள நாகலாபுரம் எஸ்ஏஎன் மேல்நிலைப்பள்ளி வேளாண்மை பிரிவு சார்பில் நாகலாபுரம் கால்நடை ஆஸ்பத்திரி வளாகத்தில் கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு முறைகள் பற்றிய ஒருநாள் விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. முகாமை பள்ளி தலைமையாசிரியர் முருகாண்டிசாமி தலைமை வகித்து துவக்கி வைத்து வேளாண்மையின் இணைதொழில்களின் சிறப்புகளை விளக்கி பேசினார். முன்னதாக வேளா ண்கல்வி தொழிற்கல்வி ஆசிரியர் சுரேஷ் குமார் வரவேற்றார்.

தொட ர்ந்து கால்நடை மருத்துவ அதிகாரி கண்ணபிரான் முன்னிலை வகித்து கால்நடை உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகள், கால்நடைகளின் முக்கிய இனங்கள், பால் மற்றும் முட்டை பற்றிய அறிவியல், கால்நடை பராமரிப்பு, தீவனம் மற்றும் ஆடுகளை தாக்கும் நீலநாக்கு நோய் தடுப்பு முறைகள், இனவிருத்தி முறைகள், கால்நடைகளில் களைஎடுத்தல் உட்பட பல்வேறு கருத்துக்களை கலந்துரையாடி முØ றப்படி விளக்கம் அளித்து பேசினார். பள்ளி நிர்வாக ஆசிரியர் கணேசன் நன்றி கூறினார். கால்நடை மருத்துவ உதவியாளர் குணசீலன் மற்றும் பள்ளி மேல்நிலை வேள ாண்மை முதலாம் ஆண்டு மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**சிறுபாக்கத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2011,22:19 IST

சிறுபாக்கம் : சிறுபாக்கத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பு விழா நடந்தது.சிறுபாக்கம் பகுதி மக்களின் விளை பொருட்களை விற்பனை செய்திட நேரடி நெல் கொள்முதல் தேவை என விவசாயிகள் பலமுறை வலியுறுத்தி வந்தனர். கலெக்டர் சீத்தாராமன் உத்தரவின்பேரில் சிறுபாக்கம் தொடக்க கூட்டுறவு வங்கி அருகில் நுகர்பொருள் வாணிபக்கழகம் சார்பில் புதியதாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது.விழாவிற்கு கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் நாராயணன் முன்னிலை வகித்தார். ஆறுமுகம் வரவேற்றார்.ஊராட்சி தலைவர் செந்தாமரைக்கண்ணன் தலைமை தாங்கி, துவக்கி வைத்தார். இதில் விவசாயிகள் துரைசாமி, பாலாஜி, கோவிந்தசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் குழுக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2011,22:18 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் அடுத்த பள்ளிப்பட்டு கிராமத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் உளுந்து மற்றும் காய்கறி விவசாயிகள் விவசாயிகள் குழுக் கூட்டம் நடந்தது.மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் தனவேல் தலைமை தாங்கினார்.கூட்டத்தில் விளை பொருட்களின் விற்பனை வாய்ப்புகள் குறித்தும், சந்தை வாய்ப்புகள், தரம் பிரிப்பு மற்றும் டாடா சன்ஸ் நிறுவன புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.கோட்ட அலுவலர் அமுதா காய்கறிகளை விவசாயிகள் நேரடியாக உழவர் சந்தைக்கு கொண்டு வந்து விற்பது குறித்து ஆலோசனை வழங்கினார். உதவி வேளாண் அலுவலர் அருள் பிரகாசம், அறிவழகன், ஜெயபால் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினத் தந்தி

***நல்லிக்காயில் இருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பது எப்படி? வேளாண் பல்கலை கழகத்தில் பயிற்சி***

*கோவை, மார்ச்.8–*

*கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழகத்தில் நெல்லிக்காயில் இருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பது குறித்த பயிற்சி வருகிற 15 மற்றும் 16–ந் தேதிகளில் நடக்கிறது. இதில் நெல்லிகாயிலிருந்து கலவை பானங்கள், சர்க்கரைப் பாகு, கேண்டி மிட்டாய் மற்றும் துருவல், தயாரித்த பொருட்களை சுகாதார முறையில் அடைத்தல், தொழில் தொடங்குவதற்கான உரிமம், பொருட்களை விற்பனை செய்வதற்கான வங்கி கடன் வசதி, விற்பனை செய்யும் உத்தி ஆகியவை குறித்து பயிற்சி வழங்கப்படும்.*

*இதில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் ரூ.1,000 செலுத்தி தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். நேரில் வந்து பெயரை பதிவு செய்து கொள்ள*

இயலாதவர்கள் பயிற்சி கட்டணத் தொகையை முதல்வர், வேளாண் பொறியியல் கல்லூரி என்ற பெயரில் கோவையில் உள்ள பாரத் ஸ்டேட் வங்கியில் பெறத்தக்க வகையில் எடுத்து பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பல்கலைக்கழகம், கோவை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் விவரங்களுக்கு 6611340, 6611268 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இந்த தகவலை வேளாண் பல்கலைக்கழகம் வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## அடுத்த பருவத்தில் வேளாண் உற்பத்தி 3.8 சதவீதம் உயரும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
மும்பை

நாட்டின் வேளாண் உற்பத்தி வரும் 2011–12 வேளாண் பருவத்தில் (ஜூலை – ஜூன்) 3.8 சதவீதம் உயர வாய்ப்புள்ளது என இந்தியபொருளாதார கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 2008–09 பருவத்தில், உணவு தானியங்கள் உற்பத்தி வரலாறு காணாத வகையில் 23.45 கோடி டன்னாக உயர்ந்து இருந்தது. வரும் 2011–12 பருவத்தில் இந்த சாதனை அளவையும் விஞ்சி இந்த உற்பத்தி 23.69 கோடி டன்னாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, நெல் மற்றும் கோதுமை உற்பத்தி மிகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மொத்த உணவு தானியங்கள் உற்பத்தியில், நெல் மற்றும் கோதுமையின் பங்களிப்பு முறையே 40 சதவீதம் மற்றும் 35 சதவீதமாக உள்ளது.

கடந்த ஏழு ஆண்டுகளாக கோதுமை உற்பத்தி தொடர்ந்து உயர்ந்து வருகிறது. வரும் நிதி ஆண்டில் இது வரலாறு காணாத வகையில் 8.23 கோடி டன்னாக அதிகரிக்கும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், பருப்பு வகைகள் உற்பத்தியும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய பருவத்தில், பருவமழை நன்றாக இருக்கும் என்ற அடிப்படையில் மேற்கண்ட புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## வசூலாகாத வேளாண் கடன் 70 சதவீதம் உயர்வு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
ஏப்ரல் – டிசம்பர் மாத காலத்தில் பொதுத் துறை வங்கிகள் வழங்கியுள்ள வேளாண் கடன்களின் மதிப்பு ரூ.2.94 லட்சம் கோடியாகும். இதே காலத்தில், இவ்வங்கிகளின் நிகர வாராக்கடன் 70 சதவீதம் அதிகரித்துள்ளது.

பாரத ஸ்டேட் பேங்க்

பாரத ஸ்டேட் பேங்கின் துணை வங்கியான ஸ்டேட் பேங்க் ஆஃப் பிகானீர் அண்டு ஜெய்ப்பூர், சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், வசூலாகாத கடன் ரூ.7 கோடி என தெரிவித்திருந்தது. இது, டிசம்பர் வரையிலான ஒன்பது மாதங்களில் ரூ.106 கோடியாக அதிகரித்துள்ளது. இது, 1414 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.
முதல் ஒன்பது மாதங்களில் பாரத ஸ்டேட் பேங்கின் வசூலாகாத கடன் அளவு ரூ.3,717 கோடியாகும். இவ்வங்கியே அதிகபட்ச வாராக் கடனைக் கொண்டுள்ளது. சென்ற நிதி ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 60 சதவீதம் அதிகமாகும். அவ்வாண்டில் இவ்வங்கியின் வசூலாகாத கடன் ரூ.2,322 கோடியாக இருந்தது.
ஆந்திரா பேங்கின் வசூலாகாத கடன் 168 சதவீதம் உயர்ந்துள்ளது. அலகாபாத் வங்கியின் வசூலாகாத கடன் 157 சதவீதமும், கார்ப்பரேஷன் வங்கியின் வாராக் கடன் 205 சதவீதமும் அதிகரித்துள்ளது. பேங்க் ஆஃப் இந்தியாவிற்கு இது 100 சதவீதம் உயர்ந்துள்ளது.

கடன் இலக்கு

நடப்பு நிதி ஆண்டுக்கு வேளாண் துறைக்கு ரூ.3.75 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனினும் இத்துறைக்கு வழங்கப்படும் கடன் ரூ.4 லட்சம் கோடியாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. எதிர்வரும் நிதி ஆண்டில் ரூ.4.75 கோடிக்கு விவசாய கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வங்கிகளின் வேளாண் கடன் பிரிவில் வாராக் கடன் அளவு அதிகரித்து வருகிறது.